1995 ஏப்ரல் 26]

தமிழகத்திலே முழுமையாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தாலுக்கா அல்லாத இடங்களிலே ஒரே தாலுக்காவிலே இரண்டு மருத்துவ மனைகள் வைப்பது என்பதுதான் இப்போது முடியாத காரியமாக இருக்கிறது. எனவே தான் அந்த பதிலை நான் சொன்னேன். இருந்தாலும் அதைப் பற்றி அரசாங்கம் நான் ஏற்கனவே தெரிவித்தபடி ஆய்வு செய்யும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 445, திரு. ஆ. செல்ல துரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

445—

உடன்குடி-சென்னைக்கு பேருந்து இயக்குதல்

*34345—**திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடன்குடியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கர்களையும் அரசியல் எத்தர்களையும் தர்மத்தின் வாள் கொண்டு பகை முடித்து வருகின்ற எங்கள் அம்மா புரட்சித் தலைவி புனிதத் தாயினுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி என் கேள்வியை தொடுக்க நான் முன் வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி ஒரு ஆணை இடுவார்களேயானால் ஒரு மாதத்தில் முடிக்கின்ற அந்த ஆணையை ஒரே நாளில் முடிக்கின்ற ஆற்றலைப் படைத்த அமைச்சர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அமைச்சரிடம் நான்கு ஆண்டுகளாக நான்

TRUTH ALONE TRIUMPHS

முறையிட்டு கேட்டுக்கொண்டிருக்கின்ற இந்த பேருந்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக எளிதாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உடன்குடியைப் பொறுத்தவரை மிகப் பெரிய வியாபார ஸ்தலம். அங்கே இருக்கின்ற வியாபார பெருங்குடிமக்கள் சென்னை, மதுரை போன்ற இடங்களுக்குத் தினமும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகிறார்கள். அவர்கள் அங்கே இருந்து வருவதற்கு சொகுசு வசதி இல்லாத காரணத்தினால், திருநெல்வேலி, தூத்துக்குடி வந்துதான் அவர்கள் பேருந்துகளிலே வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கருணை உள்ளத்தோடு உடன்குடிக்கு ஒரு சொகுசுப் பேருந்து, அதுவும் புதுப் பேருந்து விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 45 பேர்கள் செல்கின்ற செமி டீலக்ஸ் பேருந்துகள் அங்கே இயக்கிக்கொண்டிருக்கிறோம். டீலக்ஸ் பஸ் கேட்கிறார்கள். சொகுசு பஸ் வேணடுமென்று கேட்கிறார்கள். அதிலே 31 இருக்கைகள் இருக்கின்றன. அதிலே கட்டணம் கொஞ்சம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த பகுதியிலே பயணம் செய்கின்றவர்கள் ஏற்புடையவர்களாக இல்லாத காரணத்தினாலே அது இயக்காமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு தான், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றபிறகு அந்த பகுதியிலே இந்த பேருந்துகளை இயக்கி அந்த வழியாக வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு மீண்டும் அவருடைய உணர்விற்கேற்ப அவர் கேட்கும் சொகுசு பேருந்துகளை இயக்குவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அது சரியான முறையிலே இயக்கப்படுகின்ற நேரத்திலே அதிலே மக்கள் பயணம் எந்த அளவுக்கு செய்கின்றார்களோ அந்த எண்ணிக்கையின் அடிப்படையிலே ஒரு வார காலத்தில் டிரையல் சிஸ்டமாக அதை இயக்கி அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் சரியாக இருக்குமேயானால் அதிலே பயணம் செய்கின்றவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்குமேயானால் அந்த பேருந்துகள் தொடர்ந்து அங்கே இயக்கப்படும்.

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டத்திலே எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்கள் உடனுக்குடன் தீர்வு

1995 ஏப்ரல் 26]

கண்டு வருவதைப் போல, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் என்னுடைய கேள்விக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்வு கண்டு தந்தமைக்கு என்னுடைய தொகுதி சார்பிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தென் மாவட்டங்கள் பிரச்சினைகளில் எனக்கு எளிதாகத் தீர்வு காணமுடிகிறது. இங்கே தான் தீர்வு காணுவதிலே கஷ்டப்படுகிறேன்.

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடன்குடி பகுதி வியாபார பெருங்குடிமக்கள் சார்பிலே என்னுடைய இதயம் கனிந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, அங்கே விடப்பட்டிருக்கின்ற அந்தப் பேருந்தை புதிய பேருந்தாகவும், அந்தப் பேருந்துக்கு, எங்களுடைய பகுதியிலே பனைமரத் தொழில் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பனைமரத் தொழிலை நினைவுப்படுத்துகின்ற வகையில், 'கற்பகம்' என்று பெயர் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு திருச்செந்தூர் தொகுதிக்கு வருகை தருவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; தாங்கள் வருகை தருகின்றபோது அவர்களுடைய புனித பொற்கரங்களால் இந்தப் புதிய பேருந்தை இயக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசில் சிறப்பான முறையிலே எந்தப் பணிகளாக இருந்தாலும் நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். நானே வந்து அந்தப் பேருந்தை இயக்குவதைக் காட்டிலும் மாண்புமிகு உறுப்பினரே பேருந்தை இயக்கலாம். அந்தப் பேருந்தை ஓட்டுபவரே வேறு. நீங்கள் மேலே ஏறி இறங்குவதுதான் அந்த வேலை. அதைத் தவிர ஒன்றும் இல்லை. ஒரு போட்டோவும் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, நீங்களே அதை இயக்கிக்கொள்ளலாம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் புதிய பேருந்து என்று சொன்னார்கள். புதிய பேருந்துதான் அங்கே விடப்படும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 446, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.